**இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனம் - 2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக் கூற்றுக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 1 | | |
| (i) நியமத்தின் 27 மற்றும் 28 பந்திகளின் பிரகாரம், 05 நிலையான வைப்புக்கள் தொடர்பாக வட்டி வருமானம் அட்டுரு அடிப்படையில் கணக்கீடு செய்திருக்காமையால் மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 1,459,334 தொகை மிகையாக மற்றும் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அட்டுரு வட்டி வருமானம் ரூபா 4,171,080 குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | அவதானிப்புக்கள் சரியானவை என மற்றும் அடுத்த வருடம் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்படுகின்றன என. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) நியமத்தின் 32 பந்தியின் பிரகாரம், இலங்கை கணக்கீட்டு நியமமொன்றின் மூலம் தேவைப்படும் அல்லது அனுமதியளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தை தவிர சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வருமானம் மற்றும் செலவுகள் பதிலீடு செய்யக்கூடாது. அவ்வாறாயினும், 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 02 நிமித்தக் கட்டுநிதிகளில் இல் காணப்பட்ட ரூபா 29,720 இற்கான செலவு மீதிகள் அத்திகதியில் உள்ளவாறு அந்த 33 கணக்குகளில் காணப்பட்ட ரூபா 610,044 தொகை வரவு மீதிகளுக்கு எதிராகவும், மீளாய்வாண்டின் போது இரண்டு மூலிகைத் தோட்டங்களில் இருந்து கிடைத்திருந்த ரூபா 2,540,257 | இந்த தவறு அடுத்த வருடம் சரி செய்யப்படும் என. | - மேற்படி - |

இற்கான வருமானம் மற்றும் ரூபா 6,148,865 இற்கான ஏனைய வருமானங்கள் மூன்று மூலிகைத் தோட்டங்களுக்கான ரூபா 9,793,701 தொகை செலவுக்கு எதிரான பதிலீடு செய்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (iii) | நியமத்தின் 51 பந்தியின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் பெறுமதிகள் அண்மித்த ரூபாக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்ல. | தற்போது பயன்படுத்தப்படும் கணினி முறைமை மூலம் பெறுமதிகள் அண்மித்த ரூபாக்களில் பதிவு செய்ய முடியாது என மற்றும் எதிர்காலத்தில் கணினி பெகேஜ் இதற்கு நேரொப்ப தயாரிக்கப்படும் என. | - மேற்படி - |

(ஆ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 2**

பின்வரும் அவதானிப்புக்களின் படி 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 192,451,043 தொகை என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த மீதி இருப்புக்களின் கிரயம், நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு இணங்க இனங் காணப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| (i) நியமத்தின் 25 பந்தியின் பிரகாரம், முன்வந்து முன்செல்லல் முறையில் அல்லது எடையிடப்பட்ட சராசரி முறை ஆகிய கிரய கணிப்பீட்டு முறைப்படி மீதி இருப்புக்களின் கிரயம் கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். எடையிடப்பட்ட சராசரி முறையின் அடிப்படையில் மீதி இருப்புக்களின் கிரயத்தை கணித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது என நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருந்த போதிலும் நியமத்தின் 27 பந்தியின் பிரகாரம் காலத்தை அடிப்படையாகக் கொண்டு அல்லது ஒவ்வொரு கொள்வனவு செய்த மிகை பண்ட இருப்பு கிடைத்த சந்தர்ப்பத்தில் அல்லது எடை இடப்பட்ட சராசரி கணிப்பதற்காக இருப்புப் பேரேடு பேணப்பட்டிருக்காததுடன், அதற்கு பதிலாக முன்வந்து முன்செல்லல் | அவதானிப்பு சரியானது எனவும், கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான முடிவுப் பண்ட இருப்பு முன்வந்து முன்செல்லல் முறையில் பேணப்பட்டிருக்கவில்லை என மற்றும் அவ்வாறு இருப்பு பதிவு செய்வதற்கு போதியளவு கணினி வசதிகள் விற்பனை நிலையங்களில் காணப்படவில்லை எனவும், மூலப்பொருள் இருப்பு மாத்திரம் முன்வந்து முன்செல்லல் முறைப்படி பேணப்பட்டு வருகின்றதெனவும், எதிர்காலத்தில் முன்வந்து முன்செல்லல் முறையின் படி இருப்பை கணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மற்றும் முடிவுற்ற பொருட்கள் மற்றும் மூலப்பொருள் இருப்பு பேணப்படுவது தொடர்பாக கணினி முறைமை ஒன்று நிறுவுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நியமத்தின் பிரகாரம் முன்வந்து முன்செல்லல் எனும் விநியோக முறை அல்லது எடையிடப்பட்ட சராசரி முறை ஆகிய கிரய மதிப்பீட்டு முறைமைகளில் கணிப்புகளில் ஒன்று தொடர்ச்சியாக கடைபிடிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் இருப்புக்களின் பெறுமதி மதிப்பீடு செய்ய வேண்டியதுடன், வருட இறுதியில் உள்ள இருப்புப் பேரேட்டின் மீதி, மீதி இருப்பு என கணக்கீடு செய்யப்பட வேண்டும். கணினி வசதிகள் காணப்படாத பிரிவுகளில் இருப்புப் பேரேடுகள் கையினால் |

| | | |
|---|---|---|
| முறைப்படி இருப்புக் கிரயம் கணிப்பதற்காக கணினி மயப்படுத்தப்பட்ட இருப்புப் பதிவேடு பேணப்பட்டிருந்தது. | | (Manually) பேணப்பட வேண்டும். |
| (ii) எடையிடப்பட்ட சராசரி முறைக்குப் பதிலாக 2020 ஜனவரி மற்றும் திசெம்பர் மாதங்களில் கிரயத்தின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதியான மூலிகை இருப்புக்கள், மீதியான முடிவுற்ற மருந்துகள் மற்றும் மீதியான பொதி செய்யும் பொருட்களின் கிரயம் முறையே ரூபா 70,360,760 தொகை, ரூபா 96,833,832 தொகை மற்றும் ரூபா 21,824,951 தொகை எனவும் வருட இறுதியில் கொள்வனவு விலையை அடிப்படையாக கொண்டு 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி காகிதாகிகள் இருப்பின் கிரயம் ரூபா 3,431,500 தொகை எனவும் கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (iii) 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடாத்தப்பட்டிருந்த வருடாந்த பண்டக் கணிப்பீட்டின் படி பௌதீக மீதியை உறுதி செய்யப்பட்டிருந்தது. அத் திகதியில் உள்ளவாறு மீதியான 25 காகிதாகி விடயங்களின் கிரயம் ரூபா 456,700 தொகை கணக்கீடு செய்திருக்காததுடன், அத்திகதியில் உள்ளவாறு கணினி துணைக் கருவிகள் மீதி இருப்பின் கிரயம் ரூபா 1,947,949 தொகை சொத்தொன்று என கணக்கீடு செய்யாமல் இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தன. | இந்த காகிதாகிகள் இருப்பு பல வருடங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்திருந்தமையால் குறிப்பிட்ட கிரயத்தை கண்டறிந்த பின்னர் கணினி முறைமைக்கு உட்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது எனவும், கணினி துணைக் கருவிகள் தொடர்பாக சரி செய்தல் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் எனவும். | இந்தத் தவறுகள் சரி செய்ய வேண்டும். |
| (iv) நடாத்தப்பட்டுவந்த 08 களஞ்சியங்களில் 03 களஞ்சியங்கள் தொடர்பாக மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது, ரூபா 842,292 கிரயத்தை உடைய மூலிகை மூலப்பொருட்கள் 20 இன் மற்றும் ரூபா 387,590 கிரயத்தை | 2019 ஆண்டில் இருப்புப் பற்றாக்குறை மற்றும் மிகைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், கொரோனா பேரழிவு காரணத்தினால் ஏற்பட்ட நிலைமை மத்தியில் 2020 ஆண்டின் இருப்புப் | பௌதீக கணிப்பீடுகளின் போது கண்டறியப்பட்ட இருப்புப் பற்றாக்குறை மற்றும் மிகைகள் கணக்கீடு செய்யப்பட்டு நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் தொடர் |

| | | | |
|---|---|---|---|
| | உடைய 12 முடிவுற்ற மருந்துப் பொருட்கள் இருப்புப் பற்றாக்குறை மற்றும் ரூபா 11,734,245 கிரயத்தை உடைய 20 மூலிகை மூலப்பொருட்கள் மற்றும் ரூபா 290,222 கிரயத்தை உடைய 31 முடிவுற்ற மருந்துப் பொருட்கள் இருப்புகள் மிகையாக காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. எனினும், அந்த இருப்புப் பற்றாக்குறை மற்றும் மிகைகளை கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன், நிதிப் பிரமாணம் 103, 104 மற்றும் 105 பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட்டிருக்கவில்லை. | பற்றாக்குறை மற்றும் மிகைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் தாமதமாகியது எனவும் மற்றும் எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (v) 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி முடிவுற்ற மருந்து இருப்பில் உள்ளடங்கிய சேதமடைந்த மற்றும் காலவதியாகிய முடிவுற்ற மருந்து பொருட்கள் இருப்பின் கிரயம் ரூபா 7,301,072 தொகை இலாபத்திற்கு எதிராக பதிவழிப்பதற்கு மற்றும் நிதிப் பிரமாணம் 103, 104 மற்றும் 105 பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வருடாந்த பண்டக் கணிப்பீடு கண்டறியப்பட்டிருந்த சேதங்கள் மற்றும் காலவதியாகிய முடிவுற்ற மருந்து அலகுகள் 19,516 இற்கான, காகிதாகி அலகுகள் 671 இற்கான மற்றும் மூலிகை மூலப்பொருள் 177 கிலோகிராம் இற்கான கிரயத்தை கணித்து கணக்கீடு செய்திருக்காததுடன், பொதி செய்யும் பொருட்களின் இருப்புக்களில் உள்ளடங்கிய சேதமுற்ற மற்றும் காலவதியாகிய இருப்பினை கணித்தும் இருக்கவில்லை. | மீதியாகிய முடிவுற்ற மருந்துப் பொருட்கள் இருப்புக்களில் விற்பனை நிலையங்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் 07 மற்றும் 08 களஞ்சியங்களில் பயன்படுத்த முடியாதிருந்த மற்றும் காலவதியாகிய இருப்புக்கள் அடங்கியிருந்ததென, 2021 ஆண்டின் போது 07 மற்றும் 08 களஞ்சியங்களில் பயன்படுத்த முடியாதிருந்த மற்றும் காலவதியாகிய இருப்புக்கள் அழிக்கப்பட்டன என, 2021 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்ளப்படும் எனவும் மற்றும் களஞ்சியத்தில் காணப்பட்ட பல வருட காலம் முதல் காணப்படும் பழைய மூலப்பொருட்கள், பொதி செய்யும் பொருட்கள், (லேபல்) காகிதாகிகளுக்காக கணினி முறைமையில் விலைகள் காட்டப்படாமையால் அவற்றின் கிரயத்தை இனங் கண்ட பின்னர் சரி செய்தல் மேற்கொள்ளப்படும் என. | சேதங்கள் மற்றும் காலவதியாகிய இருப்புக்களின் கிரயத்தை சரியாக கணித்து கணக்கீடு செய்வதற்கும் முறைப்பிரகாரம் அப்புறப்படுத்துவதற்கும் அந்த இருப்புக்களை பதிவழிப்பதற்கு மற்றும் உரிய நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை வேண்டியிருந்தது. |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் 14 ஆம் பந்தியின் (அ) மற்றும் (ஆ) பிரிவுகளில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு முரணாக, முன்னைய ஆண்டு வரை | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

கடைபிடிக்கப்பட்ட இருப்புக் கணித்தல் கொள்கை மீளாய்வாண்டின் போது மாற்றப்பட்டிருந்ததுடன், நியமத்தின் 29 பந்தியின் பிரகாரம் கொள்கை மாற்றப்பட்டது என வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது 22 விற்பனை நிலையங்களில் கடன் விற்பனை ரூபா 7,763,620 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | இந்தத் தவறு சரி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | அநுராதபுரம் மதவச்சியில் அமைந்துள்ள மூலிகை தோட்டத்தினை அபிவிருத்தி செய்து எல்லை வேலி நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,808,795 தொகை மூலதனப் படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்குப் பதிலாக நடைமுறை வேலையின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | செலவிடப்பட்ட தொகை அடுத்த கணக்குக் காலப்பகுதியில் கிரமமாக கழிக்கப்படும் என. | இந்த தவறினை சரி செய்ய வேண்டும். |
| (இ) | மொத்தக் கிரயம் ரூபா 5,376,250 தொகையிற்கான தன்னியக்க அறைக்கும் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்வதற்காக முன்னைய ஆண்டின் போது அந்தத் தொகை முற்பணம் என செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அந்த இயந்திரம் வழங்கப்பட்டு பொருத்தப்பட்டிருந்த போதிலும் அந்த கிரயத்தினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | 2021 ஆண்டின் போது கணக்குப் புத்தகங்களுக்கு எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (ஈ) | முன்னைய ஆண்டின் வருமான வரிச் செலவு ரூபா 820,104 தொகையினால் குறைவாக கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்ட தவறினை சரி செய்திருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என மற்றும் இந்த தவறு 2021 ஆண்டில் சரி செய்யப்படும் என. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இருப்பு சேதங்களுக்கான ஏற்பாடு ரூபா 8,373,176 தொகையாக இருக்க வேண்டிய போதிலும் நிதி நிலைமைக் கூற்றின் படி அந்த ஏற்பாடுகள் ரூபா 11,179,466 தொகையாக இருந்தமையால் வித்தியாசம் ரூபா 2,806,290 தொகையாக இருந்தது. அதேபோல் மக்கள் வங்கியின் மீதியை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் படி இரண்டு சேமிப்புக் கணக்குகளில் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 5,574,664 தொகை எனினும், நிதி நிலைமைக் கூற்றின் படி அது ரூபா 4,210,243 தொகையாக காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 1,364,421 தொகையாக இருந்தது. மேலும், முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் படி பொதுச் செலவுகள் முற்பணக் கணக்கில் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மற்றும் பேரேட்டுக் கணக்கில் 2020 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மீதிகளிடையே ரூபா 5,458,141 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டதுடன், நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 9,927,344 தொகையான மீதியை உறுதிப்படுத்துவதற்காக போதியளவு அட்டவணைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.<br>அதேபோல் உரிமைகள் மாற்றக் கூற்றில் முன்னைய ஆண்டின் சீராக்கல் என காட்டப்பட்டிருந்த ரூபா 8,906,193 இனால் ரூபா 6,047,654 தொகை நாட்குறிப்பின் மூலம் உறுதிப்படுத்தியிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என, ரூபா 2,806,290 இற்கான உரிமை மாற்றங்கள் கூற்றில் திரட்டிய இலாபத்திற்கு சீராக்கல் செய்ய வேண்டியிருந்ததால் எதிர்காலத்தில் அதனை சரி செய்யப்படும் எனவும், இனங்காணப்படாத வைப்புக்களின் காரணமாக ஏற்பட்டிருந்த ரூபா 1,364,421 இற்கான வித்தியாசத்தை இனங்கண்ட பின்னர் சரி செய்யப்படும் எனவும், பொது செலவு முற்பணக் கணக்கில் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 9,927,344 தொகைக்காக அட்டவணைகள் மற்றும் உரிமைகள் மாற்றக் கூற்றில் முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் ரூபா 6,047,654 இற்கான தகவல்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது எனவும், எதிர்காலத்தில் அந்த தகவல்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், | தவறுகள் சரி செய்யப்பட வேண்டியதுடன், குறிப்பிட்ட தகவல்கள் மற்றும் நாட்குறிப்பு பதிவுளை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 23,819,450 தொகைக்கான அட்டுருச் செலவுகளில் அடங்கியுள்ள முன்னைய ஆண்டுகளில் இருந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 14,162,022 இற்கான தீர்க்கப்படாத | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் எனவும், 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 14,162,022 இற்கான செலவு மீதிகள் தொடர்பான மற்றும் ரூபா 260,839 இற்கான முத்திரை வரி | தீர்க்கப்படாத மீதிகளை இனங்கண்டு தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த சரி செய்தல்கள் தொடர்பான நாட்குறிப்பு பதிவுகள் |

| | | |
|---|---|---|
| செலவு மீதிகள் மற்றும் செலுத்தப்படாத முத்திரை வரி ரூபா 260,839 இற்கான சரி என உறுதிப்படுத்துவதற்கு போதியளவு சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | தொடர்பான தகவல்கள் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும் என. | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 166 | பணத்துடன் கிடைக்கக் பெறும் உரிய ஆவணங்கள் நாளதுவரை ஆக்கப்பட்டு பேணப்பட்டிருக்காமை மற்றும் முறையான பதிவுகள் வைத்திருக்காத காரணத்தினால் ஒரு வருடத்தை விட பழமை வாய்ந்த பெறுவனவுகள் ரூபா 268,135 தொகையினை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகின்றேன் என மற்றும் இந்த பழைய பெறுவனவுகளை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 382 | 02 வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்வதற்காக அனுப்பப்பட்டிருந்த ஆனால் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்காத ரூபா 351,871 தொகை பெறுமதியான ஒரு வருடத்தை விட பழமை வாய்ந்த 06 காசோலைகள் தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு பதிலாக 2020 திசெம்பர் 31 திகதி வரை வங்கி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | முன்னர் இருந்து காணப்படும் தீர்க்கப்படாத மீதி ஒன்றாக இருந்ததுடன் இது தொடர்பாக வழக்கு நடவடிக்கை ஒன்று காணப்படுவதனால் இந்த மீதியை வங்கி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டது. மேலும், இது தொடர்பாக கண்டறிதல் மேற்கொள்ளப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | இது தொடர்பாக முறையான பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (iii) நிதிப் பிரமாணம் 383 | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படாமையின் காரணத்தினால் ஒரு வருடத்தை விட மிகையான காலம் முதல் இனங்காண முடியாமல் இருந்த கணக்கிற்கு நேரடியாக கிடைத்திருந்த ரூபா 683,636 தொகையினை இனங்கண்டு புத்தகங்களுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் அதற்கு பதிலாக 2020 திசெம்பர் 31 திகதி வரை வங்கி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனத்தின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக காசு வைப்புச் செய்வதற்காக பலவற்றின் கூட்டுத்தொகையாக இருந்ததென மற்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் போதியளவாக காணப்படாமையால் வைப்புச் செய்தவர் யார் என உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாமல் இருந்தமையால் நிதிப் பிரமாணம் 383 இன் படி நடவடிக்கை எடுக்க முடியாமல் காணப்பட்டது என. | வைப்புச் செய்தவரை இனங்காண முடியாவிடின் பணத்தை அரச வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டும். |
| | (iv) நிதிப் பிரமாணம் 396 | ஒரு வருடத்தை விட பழமை வாய்ந்த வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ரூபா 15,236 இற்கான 13 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் 2020 திசெம்பர் 31 திகதி வரை வங்கி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. | 10 வருடங்களை மிகைத்த காலம் முதல் காணப்படும் இனங்காண முடியாத மீதியொன்றாக இருப்பதுடன், இது தொடர்பாக வழக்கொன்று காணப்படுவதனால் வங்கி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது என. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 1702/5 இலக்கம் கொண்ட 2011 ஏப்ரல் 20 திகதிய அதிவிஷேட வர்த்தமானியின் அட்டவணை 05 | இருப்புப் புத்தகங்களின் படி 2020 ஜூலை 27 திகதியில் உள்ளவாறு நல்லெண்ணெய் 9,019 கிலோ கிராம் காணப்பட்ட போதும், அத் திகதியில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையில் நல்லெண்ணெய் 8,922 கிலோ கிராம் மாத்திரம் களஞ்சியத்தில் இருந்ததென உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை யால் ரூபா 53,253 தொகை கிரயத்தையுடைய நல்லெண்ணெய் 97 கிலோ கிராமிற்கான இருப்பு பற்றாக்குறை ஒன்று அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக நிதிப் | நல்லெண்ணெய் தொடர்பாக காணப்பட்ட 97 கிலோ கிராம் இருப்புப் பற்றாக்குறை தொடர்பாக நிதிப் பிரமாணம் 103, 104 மற்றும் 105 பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய குழுவின் பரிந்துரையுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை விரைவாக பெற்று நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிரமாணம் 103,104 மற்றும் 105 பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) | 2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 இலக்கம் கொண்டு பொது நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் நாளதுவரை ஆக்கப்பட்ட நிறுவனத்தின் அமைப்புக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தற்போது காணப்படும் பதவியணி தொடர்பான விபரங்கள், வருடாந்த பாதீட்டினை அடிப்படையாகக் கொண்ட முக்கியத்துவ அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம், அதனை செயற்படுத்திய கால சட்டகம் மற்றும் அந்த செயற்பாடுகள் மூலம் எதிர்பார்க்கும் வெளியீட்டு மட்டம் ஆகிய விபரங்கள் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் மற்றும் குறைபாடுகளை இனங்கண்டு சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் 2021 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் 2021 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் குறிப்பிட்ட கால சட்டகத்தில் முறைப் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டியிருந்த துடன், அதற்கு ஏற்றவாறு முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2013 செப்தம்பர் 11 திகதிய 02/2013 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 3.5 | சேவை நாடுனர் ஒருவர் பணிக்கொடை நிதியம் பெற்றுக்கொள்வதற்காக தகைமை பெற்ற பின்னர் கூடிய விரைவில் அவருக்குரிய பணத்தை வழங்குவதற்கு வருடாந்தம் கணிக்கப்பட்ட பணிக்கொடைக்கு சமமான தொகையொன்று முதலீடு செய்திருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குவது எனவும், எதிர்காலத்தில் முறையாக முதலீடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பணிக்கொடை நிதியத்திற்கு சமமான தொகை ஒன்று முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 1994 ஜுன் 14 திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் விதி முறைகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது மற்றும் கடந்த 06 ஆண்டுகளில் திறைசேரியின் அங்கீகாரம் இன்றி செலுத்தியிருந்த மொத்த ஊக்குவிப்பு கொடுப்பனவின் கூட்டுத்தொகை ரூபா 474,979,883 தொகையாக இருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குவது எனவும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்று ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்பட்டது எனவும், தற்போது புதிய ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் | முறையான அங்கீகாரம் பெற்றுள்ள ஊக்குவிப்பு கொடுப்பனவு முறைமை ஒன்று மீது மாத்திரம் ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மற்றும் உள்நாட்டு மருத்துவத்தை மேம்படுத்துதல் கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி சமூக சுகாதார இராஜாங்க அமைச்சின் பரிந்துரையுடன் திறைசேரியின் அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்டுள்ளது என. | வேண்டும். |
| (ஊ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1 | மீளாய்வாண்டின் போது ரூபா 37,277,148 தொகை செலவிடப்பட்டு நல்லெண்ணெய் உட்பட மூலிகை மூலப்பொருள்கள் கொள்வனவுகள் பலவற்றில் வழங்குனருடன் முறையான உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டு இருக்காததுடன், முறையான பெறுபவர் பதில் கடிதம் அனுப்புவதில் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பல்வேறு கொள்வனவுகளின் போது வழங்குனர்களுடன் முறையான முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இருக்காமை மற்றும் பெறுபவர் கடிதம் அனுப்பும் விடயங்கள் மேற்கொள்ளப்படாமை ஆகிய பலவீனங்களை தவிர்த்துக்கொள்வதற்காக கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது என மற்றும் covid 19 தொற்றுநோய் நிலைமைக்கு மத்தியில் அவ்வப்போது வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மீது கூடியளவில் முறைப்பிரகாரம் பெறுகை அங்கீகாரங்களின் கீழ் செயற்பட்டதென. | அரச பெறுகை வழிகாட்டல் கோவை வழிகாட்டலுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6.10 மில்லியனிற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 0.65 மில்லியன் தொகை ஆகும். அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 5.45 மில்லியனிற்கான அதிகரிப்பு ஒன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் விற்பனை வருமானம் ரூபா 29.32 மில்லியன் தொகையினால் குறைவடைந்திருந்த போதிலும், நிலையான வைப்புக்கள் மீதான நிதி வருமானம் ரூபா 18.7 மில்லியனினால் அதிகரித்திருத்தல், விற்பனை கிரயம், நிருவாகச் செலவு, விற்பனை மற்றும் விநியோகச் செலவு முறையே ரூபா 13.4 மில்லியனினால், ரூபா 15.7 மில்லியனினால் மற்றும் ரூபா 9.8 மில்லினினால் குறைவடைந்திருத்தல் இந்த அதிகரிப்பிற்கு முக்கியமான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் விற்பனை வருமானம் 4.15 சதவீதத்தினாலும், விற்பனைச் கிரயம் 2.7 சதவீதத்தினாலும் ஏனைய வருமானங்கள் 72 சதவீதத்தினாலும் குறைவடைந்ததுடன் நிதி வருமானம் 18.7 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது மொத்த இலாப விகிதாசாரம் 1 சதவீதத்தினாலும் தேறிய இலாப விகிதாசாரம் 0.8 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் போது 1:6.3 தொகையாக இருந்த நடைமுறை சொத்துக்கள் விகிதாசாரம் மீளாய்வாண்டின் போது 1:5.86 வரை குறைவடைந்திருந்ததுடன், திடீர் சொத்து விகிதாசாரம் 1:4.36 முதல் 1:4.09 வரை குறைவடைந்திருந்தது.

(இ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் இருப்பு புரழ்வு வீதம் 5.11 இலிருந்து 4.83 வரை குறைவடைந்திருந்தமையால் இருப்புக்களை தடுத்து வைத்திருக்கும் காலம் 71 நாட்கள் முதல் 76 நாட்கள் வரை 5 நாட்களினால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபன உற்பத்திகள், செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வத்தை அதிகரிக்கும் குறிக்கோளுடன் மொத்த கிரயம் ரூபா 45,161,388 தொகைக்கான 04 புதிய இயந்திரங்கள் வழங்கி பொருத்தும் ஒப்பந்த வேலை 2019 ஜூலை 03 திகதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் அவற்றில் ரூபா 26,544,603 தொகை கிரயத்தையுடைய தன்னியக்க போத்தல்கள் நிரப்பும் இயந்திரம் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படாத காரணத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.<br>தன்னியக்க பக்கெற்றுகள் நிரப்பும் இயந்திரம், தன்னியக்க மாத்திரைகள் தயாரிக்கும் இயந்திரம், தன்னியக்க ஆரம்ப அரைக்கும் இயந்திரம் ஆகிய மூன்று இயந்திரங்களும் வழங்கி பொருத்துவதற்காக ஒப்பந்த வேலை ஒப்படைக்கப்பட்டு ஒரு வருட காலம் | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். மற்றும் 03 இயந்திரங்கள் வழங்குவதில் தாமதத்திற்கு கொவிட் தொற்றுநோய் நிலைமை தாக்கியிருந்தது. | பெறுகை சட்ட விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடந்திருந்த போதும் வழங்குனர்களுடன் முறையான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் தாமதக் கட்டணம் அறவீடு செய்ய முடியாமல் இருந்தது. | | |
| (ஆ) | 2020 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ரூபா 2,319,609 கிரயத்திற்கான மீதி காகிதாகிகள் இருப்பொன்று காணப்பட்ட போதும் மீளாய்வாண்டின் போது ரூபா 1,283,718 இற்கான காகிதாகிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 3,431,501 கிரயத்திற்கான மீதி காகிதாகிகள் இருப்பொன்று காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 171,827 கிரத்திற்கான காகிதாகிகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தென அவதானிக்கப்பட்டது. தேவைப்பாடுகளை உரிய முறையில் இனங்காணாமல் மிகைக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் மீதியான இருப்புக்கள் சேதமடைதல் மற்றும் காலவதியாகும் ஆபத்து நிலைமை காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. வருட ஆரம்பத்தில் ஆரம்ப இருப்பு மற்றும் நடைமுறை ஆண்டின் தேவைப்பாட்டின் படி புதிய இருப்புக்கள் கொள்வனவு செய்யப்பட்டது எனவும், கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை பேணிச் செல்வதற்காக கவர்ச்சிகரமான காகிதாகிகள் இருப்பொன்று தேவைப்படுகின்றது எனவும், எவ்வாறாயினும் மிகை அல்லது அத்தியவசிய இருப்பு ஒன்று பேணிச் செல்லல் தொடர்பாக மேலும் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | தேவைப்பாடுகளை உரிய முறையில் இனங்கண்டு காகிதாகிகள் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | களஞ்சியத்தில் முறைப் பிரகாரம் இருப்புக்களை களஞ்சியப்படுத்தி இருக்காததுடன் உச்ச குறைந்த மற்றும் மீள்கட்டளை இருப்பு மட்டங்கள் பேணப்பட்டிருக்கவில்லை எனவும், மெதுவாக அசையும் இருப்புக்கள் காணப்பட்ட போதும் அந்த விடயங்களை இனங்காண்பதற்கு மற்றும் விற்பனைக்காக விற்பனை மேம்படுத்தல் உத்திகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும், மருந்துப் பொருட்களின் விலை அதிகரித்தல், லேபல்கள் மற்றும் பொதிகள் ஈரளிப்படைதல் ஆகிய காரணங்களினால் விற்பனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த நீண்ட நாட்கள் கொள்ளக்கூடிய மருந்து வகைகள் காலவதியான மருந்துகளுடன் | அவதானிப்புடன் இணங்குகின்றேன் எனவும், முடிவுற்ற மருந்துக் களஞ்சியத்தில் காணப்பட்ட வரையறுக்கப்பட்ட இட வசதியை உச்ச மட்ட அளவில் பயன்படுத்தக் கூடிய வகையில் இராக்கை முறைமை நவீனமயப்படுத்தலுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், 007 களஞ்சியத்தில் இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும், 008 களஞ்சியத்தில் காணப்படும் இடவசதியை அதிகரிப்பதற்காக வேறு பகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது எனவும், உச்ச குறைந்த மற்றும் மீள் கட்டளையிடல் இருப்பு மட்டத்தை உரிய பிரிவுடன் கலந்துரையாடி தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் | களஞ்சிய நிருவாகம் முறைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒன்றாக களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்தது எனவும், அந்த இருப்புக்களை மீண்டும் லேபல் படுத்தி விற்பனை செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் காலவதியாவதற்கு இடமளித்திருந்ததுடன், விற்பனை நிலையங்களில் மற்றும் களஞ்சியங்களில் காணப்பட்ட பயன்படுத்த முடியாத மருந்து வகைகள் நீண்ட காலமாக இருப்புப் புத்தகங்களில் இருந்து அகற்றப்படாமல் சாதாரண இருப்புக்கள் என கணிக்கப்பட்டிருந்ததுடன், விற்பனை நிலையங்களில் பெருந்தொகையான இட வசதிகள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டதெனவும், மாத்தறை, கண்டி, மாத்தளை விற்பனை நிலையங்களில் மற்றும் கூட்டுத்தாபனத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | மேற்கொள்ளப்படும் எனவும், மெதுவாக அசையும் இருப்புக்களை விற்பனை செய்வதற்காக கொவிட் 19 உலகலாவிய தொற்றுநோய் நிலைமை மத்தியிலும் விற்பனை மேம்படுத்தல் விடயங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், 08 கனஞ்சியத்தில் காலவதியான மருந்துகளை உரிய முறையில் இனங்கண்டு அகற்றுவதற்கும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டது எனவும், மற்றும் குறை பயன்பாட்டுடன் காணப்படும் விற்பனை நிலையங்கள் மருத்துவ சிகிச்சை நிலையங்கள் ஆரம்பிப்பதற்காக திட்டமிடப்பட்ட போதிலும் உலகலாவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக அவ்விடயத்தை செயற்படுத்தப்பட முடியாதுள்ளது. | |
| (ஈ) | அநுராதபுரத்தில் அமைந்துள்ள மூலிகை தோட்டத்தை அபிவிருத்தி செய்து எல்லை வேலி நிர்மாணிப்பதற்காக ரூபா 1,808,795 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணியை முறைப்பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கியிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். மதவச்சி பிரதேச செயலாளரினால் காணியை கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்கு தீர்மானிப்பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரை முறையான உரித்தாக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், மற்றும் செலவிடப்பட்டிருந்த செலவுகள் அடுத்த கணக்குக் காலப் பகுதியில் கிரமமாக கழிக்கப்படும் எனவும், | காணியை முறைப் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ள 77 செயற்பாடுகளில் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 333 மில்லியன் | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் எனவும், போதியளவு அரச நிதி ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமை, நிலவிய | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகைக்கான 19 மூலதன பெறுகைகள் தொடர்பாக கருமங்கள் ஏதும் நிறைவேற்றுவதற்கு முடியாமல் இருந்தது. அரச நிதி ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமை, காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமை இதற்கான காரணம் என தலைவரினால் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக மூலதனச் செயற்பாடுகள் அனைத்தும் நிறைவேற்றுவதற்கு இயலாமல் போனது என. | |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான விற்பனவு வருமானம் ரூபா 676,304,359 இல் ரூபா 504,447,317 தொகை எனப்படும் 75 சதவீதம் அரச துறையில் இருந்து கிடைத்திருந்ததுடன் ரூபா 171,857,042 தொகை எனப்படும் 25 சதவீதம் மாத்திரம் தனியார் துறையில் இருந்து கிடைத்திருந்தது. இயல்பாகவே கிடைக்கக் கூடிய அரச துறை விண்ணப்பங்களுக்காக கூடுதலான முயற்சி எடுத்தல், சந்தையின் தேவையை புதிய முறையில் இனங்காணாமை, உரிய விற்பனை உத்திகளை பயன்படுத்தாமை மற்றும் விளம்பரங்கள் போதியளவாக காணப்படாமை தனியார் துறையின் விற்பனைகள் வருமானம் குறைவதற்கு காரணமாக இருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். 2020 கொவிட் தொற்றுநோய் நிலைமை மத்தியில் இரண்டு காலாண்டு ஒட்டுமொத்தமாக நாடு செயலிழந்து காணப்பட்டதென இந்தக் காலப் பகுதியில் மனிதவள பற்றாக்குறை, மூலப்பொருள் பெற்றுக்கொள்வதில் சிரமம் காரணமாக வழங்கல் செயற்பாடுகளில் வீழ்ச்சி ஏற்படல் மற்றும் விற்பனை நிலையங்கள் மூடி வைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்ட காரணத்தினால் ஒட்டு மொத்த செயற்பாட்டு முறைமை செயற்படாதிருத்தல் ஏற்பட்டது. அவ்வாறாயினும், 2019 தனியார் துறையின் ஒட்டுமொத்த விற்பனை வருமானத்திற்கு நேரொப்ப 2020 ஆண்டின் போது 25 சதவீதத்தினால் விற்பனையை அதிகரித்துக் கொள்வதற்கு முடியுமானது எனவும், கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலைமையை கவனத்தில் எடுத்து ஆரம்ப மாதங்களின் விளம்பர ஊடகங்கள் ஊடாக விற்பனை விளம்பரப்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை எனவும், வருடத்தின் கடைசி மாதங்களில் விற்பனவில் ஏற்பட்டிருந்த முன்னேற்றத்துடன் ஆரோக்கிய மாதாந்த சஞ்சிகையில் "கினிஹல்கய" பத்திரிகையில் இலங்கை | தனியார் துறையின் விற்பனை வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆயுள்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் அறிவித்தில் வெளியிடப்பட்டது எனவும், கொரோனா வைரஸ் நிலைமையினால் இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் புதிய உற்பத்தி தொகுதி ஒன்றினை வெளியிடும் விழா ஒன்று சுகாதார அமைச்சரின் பங்களிப்புடன் நடாத்தப்பட்டது எனவும், அங்கு அச்சு மற்றும் வானொலி, தொலைக்காட்சி ஆகிய மூன்று ஊடகங்களையும் உள்ளடக்கக் கூடிய விதமாக விற்பனை விளம்பரம் ஒன்று இலவசமாக மேற்கொள்வதற்கு முடியுமானது எனவும். | |
| (இ) | மீளாய்வாண்டின் போது அரசாங்கத் துறைக்கு 134 வகையான உற்பத்திப் பொருட்கள் தொடர்பாக கோரிக்கை நிறைவேற்ற முடியாமல் போன காரணத்தினால் கூட்டுத்தாபனம் இழந்த வருமானம் ரூபா 79,614,405 தொகையாக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் போது அவ்வாறு இழந்திருந்த வருமானம் ரூபா 78,372,900 தொகையாக இருந்தது. விற்பனை மேம்பாட்டு முயற்சியொன்றின்றி அரச துறையில் கிடைக்கக்கூடிய இந்த கேள்வியை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமையால் சந்தையில் இருந்த பங்கு கை நழுவக்கூடிய ஆபத்து நிலை ஒன்று காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. அரச துறையில் மூலம் இழந்துள்ள விற்பனை வருமான இழப்பினை குறைத்துக் கொள்வதற்வதற்காக உச்ச மட்ட அளவில் செயல்படுவது எனவும், கடந்த ஆண்டுகளில் கேள்வி மற்றும் புதிய சந்தைகளை கைப்பற்றலை கவனத்தில் எடுத்து இலக்குகளை நெருங்குவதற்கு இயலுமான முறையில் உற்பத்தித் திட்டம் தயாரிக்கப்படுகின்றது என, அரச துறையில் இழந்துள்ள வருமான இழப்பினை குறைத்துக் கொள்வதற்காக தலைவரின் தலைமைத்துவத்தின் கீழ் 2021 ஆண்டிற்கான விற்பனை திட்டத்தின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தலும் மாதாந்தம் மேற்கொள்ளப்பட்டதென. | அரச துறையிலிருந்து கிடைக்கக் கூடிய கேள்வியை கவர்ச்சிகரமான மட்டத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த உற்பத்தித் திட்டம் மற்றும் விற்பனைத் திட்டத்தின் படி செயலாற்றும் கூட்டத்தாபனத்தின் பல்வேறு துறைகளில் செய்முறைகளின் கருமங்களை மதிப்பாய்வு செய்வதற்காக செயலாற்றல் சுட்டிகள் நிறுவப்பட்டு அந்த கருமங்களின் செயலாற்றல் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். அடுத்த வருடங்கள் தொடர்பாக செயற்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது எனவும், அனைத்து பிரிவுகளினாலும் விற்பனை மற்றும் உற்பத்தி செய்முறைகள் தொடர்பாக நிறைவேற்றப்படும் கருமங்கள் தொடர்பாக செயலாற்றல் சுட்டிகள் நிறுவப்பட்டு செயற்படுவதற்கு அடுத்த வருடம் முதல் நடவடிக்கை எடுக்கப்படும் என. | கூட்டுத்தாபனத்தில் ஒவ்வொரு பிரிவின் செய்முறைகளும் செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்காக செயலாற்றல் சுட்டிகள் நிறுவப்பட்டு அவ்விடயங்களின் செயலாற்றல்கள் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |
| (உ) | கூட்டுத்தாபனத்தினால் சந்தையிலுள்ள தமது பகுதியை தீர்மானிப்பதற்காக அவ்வவ்போது சந்தைக் கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்காததுடன், போட்டி நிறுவனங்களிடையே கூட்டுத்தாபனத்தின் சந்தையின் பகுதி குறைவடைதல் அல்லது அதிகரித்தல் ஏற்பட்டிருக்கின்றதா என தொடர்பாக தெளிவொன்று காணப்படவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தாபனத்தின் சந்தையின் பகுதியை இனங்காண்பதற்கு மற்றும் புதிய நுகர்வுத் தேவைப்பாடுகளை திருப்தி அடையக்கூடிய முறையில் சந்தையின் போக்கினை இனங்காண்பதற்கு தேவையான உற்பத்திக் எண்ணக்கருக்களை இனங்காண்பதற்காக சந்தைக் கணிப்பீடு ஒன்று கொரோனா தொற்றுநோய் நிலைமை முடிவடைந்த பின்னர் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என, மற்றும் அதற்குத் தேவையான கணிப்பீட்டுப் பத்திரங்கள் ஆகிய ஆரம்ப அலுவல்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என. | கூட்டுத்தாபனத்தின் சந்தையின் பகுதியை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு புதிய நுகர்வுத் தேவை திருப்தி அடையக்கூடிய விதமாக சந்தையின் போக்கினை இனங்காண்பதற்காக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | 1969 இன் மே 11 திகதிய 14,853/3 இலக்கம் கொண்ட இலங்கை அரசாங்கத்தின் அதிவிஷேட வர்த்தமானி குறிப்பிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் 07 குறிக்கோள்களின் ஆயுர்வேத மருந்துப் பொருள் வகைகளை உற்பத்தி செய்வதற்காக தேவையான சுத்தமான | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் தேன் உற்பத்தி செய்தலை இலக்காகக் கொண்டு கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மூலிகைத் தோட்டங்களில் தேனீ | கூட்டுத்தாபனத்தின் பிரதான குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அல்லது நடைமுறை நிலைமைக்கு இணங்கக் கூடியவாறு குறிக்கோள்களை திருத்திக் கொள்வதற்கு |

பசு நெய் உற்பத்தி செய்வதற்காக சுத்தமான பசுப்பால் பெற்றுக்கொள்வதற்காக பாற்பண்ணைகள் நடாத்திச் செல்லல், மருந்து வகைகள் உற்பத்திக்காக தேவையான தேன் உற்பத்தி செய்வதற்காக தேனீ வளர்ப்பு ஏற்படுத்துதல் மற்றும் தேனீ வளர்ப்பினை வீட்டுக் கைத்தொழிலாக அபிவிருத்தி செய்தல் ஆகிய குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

வளர்ப்புப் பெட்டிகள் நிறுவப்பட்ட போதும் அந்த நிகழ்ச்சித் திட்டம் தோல்வியடைந்ததென, தேன் உற்பத்தி தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட்டு விஷேட செயற்திட்டமொன்று செயற்படுத்துவதற்கு தற்போது நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது என, கம்பஹா மாவட்டத்தில் உள்ள ஆயுர்வேத மருத்துவ பாதுகாப்புச் சங்கம்களின் அங்கத்துவ வைத்தியர்கள் 100 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு குடியேற்றங்களுடன் 100 தேனீ வளர்ப்புப் பெட்டிகள் தேன் உற்பத்தி செய்து கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என, செயற்திட்டம் தொடர்பான வைத்தியர்கள் தற்போது இனங்காணப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என, விவசாயத் திணைக்களம் மற்றும் தேன் உற்பத்தித் துறையில் ஈடுபட்டுள்ள விஷேடத்துவ அறிவுடைய நபர்களின் மற்றும் நிறுவனங்களின் உதவி இதற்காக பெற்றுக்கொள்ளப்படும் எனவும், இந்த செயற்திட்டம் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான மூலிகைத் தோட்டங்களில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது மற்றும் பசு நெய் மற்றும் பசுப்பால் பெற்றுக்கொள்வதற்காக மாட்டுப் பண்ணைகள் நடாத்துவது தொடர்பாக எதிர்காலத்தில் விஷேட கவனம் செலுத்தப்படும் என.

நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 375 தொகையாக இருந்ததுடன், உள்ளவாறான பதவியணி 316 ஆக காணப்பட்டமையால் 63 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 02 பதவிகளும் மத்திய முகாமைத்துவ மட்டத்தில் 02 பதவிகளும் கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 04 பதவிகளும் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப மட்டத்தில் 05 பதவிகளும் முகாமைத்துவ உதவியாளர் மட்டத்தில் 14 பதவிகளும் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 25 பதவிகளும் ஆக மேற்கூறிய 63 வெற்றிடங்களில் அடங்குகின்றன. அத் தேவையின் படி இந்த வெற்றிடங்களை முறைப்பிரகாரம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், பல வருட காலமாக பிரதான வைத்திய உத்தியோகத்தர், வேலைப் பொறுப்பாளர் மற்றும் இயந்திர இயக்குனர் பதவிகளுக்காக பதில் வேலை அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என, பிரதான வைத்திய உத்தியோகத்தர் பதவிக்காக 03 சந்தர்ப்பங்களில் விண்ணப்பங்கள் அழைக்கப்பட்ட போதும் தகைமை உடைய விண்ணப்பதாரி எவரும் முன்வராமை மற்றும் தகைமைகளை திருத்துவதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்துடன் விண்ணப்பிக்கப்பட்ட போதிலும், தகைமைகள் திருத்தப்படவில்லை என அந்தப் பதவியில் பதில் கடமை நியமனம் வழங்கப்பட்டிருந்த பெண் வைத்தியர் அந்த பதவியின் கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றுவதனால் அவருக்கு தனிப்பட்ட முறையில் பதவியை நிரந்தரப்படுத்துவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என கூட்டுத்தாபனத்தின் ஆட்சேர்ப்பு நடவடிக்கையின் படி வேலைப் பொறுப்பாளர் பதவிக்காக வெளி ஆட்கள் சேர்த்துக்கொள்ள முடியாது எனவும், ஆரம்ப சேவையைச் சேர்ந்த II தரத்தில் 05 வருடங்கள் சேவை அனுபவம் உள்ள உள்ளக ஊழியர்களிடம் இருந்து தெரிவு செய்யப்பட வேண்டும் எனவும், விண்ணப்பங்கள் அழைக்கப்பட்ட ஊழியர்கள் குறிப்பிட்ட சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருக்காமை காரணத்தினால் நிரந்தரமாக நியமனம் செய்யாமல் உற்பத்திச் செய்முறைகளுக்காக அத்தியவசிய பதவியொன்றாக காணப்படுவதால் அண்மித்த தகைமைகளை பூர்த்தி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி முறைப்பிரகாரம் நிரப்பி செயலாற்றலை அதிகரித்துக் கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செய்துள்ள ஆட்களுக்கு பதில் கடமை நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது எனவும், பணிப்பாளர் சபைக்கு அறிக்கை ஒன்று சமர்ப்பித்து எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும், இயந்திர இயக்குனர் பதவிக்காக 2019 ஜுலை 31 திகதி நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் ஒரு ஊழியர் பதில் கடமை ஆற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளதென மற்றும் தற்போது இயந்திர இயக்குனர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோறப்பட்டுள்ளது என. | |
| (ஆ) 2018 ஆண்டின் போது முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் 09 வகையான சேவைப் பிரிவுகளின் கீழ் கூட்டுத்தாபனத்திற்காக திருத்தப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த சேவை பிரிவைச் சேர்ந்த பதவியணி சேர்க்கப்பட்டிருந்த அனைத்து உத்தியோகததர்களுக்கும் ஆட்சேர்ப்பு நடைமுறை குறிப்பிடப்பட்டுள்ளவாறு வினைதிறமை காண் பரீட்சை நடாத்தாமல் பதவிகள் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ளது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். இந்தக் கூட்டுத்தாபன ஆரம்ப முதல் இது வரை விணைத் திறன் காண பரீட்சைகள் நடாத்தாப்பட்டிருக்கவில்லை என இது வரை காலமும் பதவிகள் நிரந்தரப்படுத்தியிருந்தது வினைத்திறமை காண் பரீட்சைகள் நடாத்தப்படாமல் எனவும், 2022 ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் குறிப்பிட்ட அனைத்து பதவியணிக்கும் விணைத்திறன் மதிப்பீடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், குறிப்பிட்ட மதிப்பீட்டின் படி ஊழியர்களை நிரந்தரப்படுத்தல் மற்றும் பதவி உயர்வு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கையின் படி வினைத்திறன் காண் பரீட்சை உரிய முறையில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டு தொடர்பாக | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என, நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டின் ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இந்த கூட்டுத்தாபனத்தின் | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நெருங்குதல் தொடர்பாக இலக்குகள், சுட்டிகளை இனங்காண்பதற்காக |

| | | |
|---|---|---|
| கூட்டுத்தாபனம் தனது விடயப்பரப்பின் கீழ் வரக்கூடிய கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என போதியளவு கவனத்துடன் நடவடிக்கை எடுத்திக்கவில்லை.அதன்படி ஐக்கிய நாடுகள் 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரல் பிரகாரம் நிறுவனத்தின் கருமங்கள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் அந்த இலக்கை நோக்கி நெருங்க வேண்டிய திருப்பு முனைகளும் இலக்குகள் மீது நெருங்குவதை அளவை செய்வதற்காக சுட்டிகளும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பணிப்பொறுப்பு தொடர்பாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் இலக்கு மற்றும் அந்த இலக்குகளை நெருங்குவது தொடர்பாக மற்றும் நிறுவனத்தின் இலக்குகளை நெருங்குவதற்கான சுட்டிகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என, மற்றும் 2022 – 2026 காலப் பகுதி தொடர்பாக நிறுவனத்தின் திட்டம் மற்றும் 2022 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது இது தொடர்பாக கவனம் செலுத்தப்படும் என. | மற்றும் முன்னேற்றத்தை அளவை செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |